புதுச்சேரி அரசு

## இந்து சமய நிறுவனங்கள் மற்றும் வக்ஃபு துறை

*(அரசு ஆணை பலவகை எண் 31/இசநி /கோ.4/2016,*
*புதுச்சேரி, நாள் 2016 ௵ டிசம்பர் ௴ 30 ௳)*

### ஆணை

புதுச்சேரி மாநிலம், புதுச்சேரி வட்டாரம், வில்லியனூர் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ கோகிலாம்பிகை சமேத ஸ்ரீ திருக்காமீஸ்வரர் தேவஸ்தானத்தை நிர்வகிக்கும் பொருட்டு அரசு ஆணை பலவகை எண் 03/இசநி/கோ.4/2006-07, நாள் 26-7-2006-ன் மூலம் நியமிக்கப்பட்ட திரு. நா. மனோகரன் (பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர், கல்வித் துறை, புதுச்சேரி) அவர்களால் சிறப்பு அதிகாரி மற்றும் நிர்வாக அதிகாரி என்கிற நிலையில் நிர்வகிக்கப்பட்டு வந்தது.

2. இவர், தேர்தல் துறையின் மூலம் 4-5-2016 அன்று சிறப்பு அதிகாரி மற்றும் நிர்வாக அதிகாரி பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டதால், தேவஸ்தானத்தின் பணிகள் பாதிக்கப்படாத வகையில் இந்து அறநிலையத்துறையில், அயல் பணியின் மூலம் நிர்வாக அதிகாரி நிலை 2-ல் பணிபுரிந்து வரும் திரு. P. தங்கமணி அவர்களை தற்காலிகமாக ஆலய பணிகளை கூடுதலாக கவனிக்கும்படி அறிவுறுத்தப்பட்டது. இந்நிலையில் மேற்படி தேவஸ்தானத்திற்கு புதிய சிறப்பு மற்றும் நிர்வாக அதிகாரி ஒருவரை நியமனம் செய்வது ஆலய மேம்பாட்டிற்கு இன்றியமையாதது என்று கருதப்படுகிறது.

3. எனவே, 1972-ஆம் ஆண்டு புதுச்சேரி இந்து சமய நிறுவனங்கள் சட்டம் 4(1)-ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்தி, புதுச்சேரி, அரும்பார்த்தபுரம், திரு. வி. க. அரசு உயர்நிலைப்பள்ளியில் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியராக பணிபுரியும் திரு. ரா. திருவரசன், த/பெ. ராமகிருஷ்ணன் அவர்களை வில்லியனூர் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ கோகிலாம்பிகை சமேத ஸ்ரீ திருக்காமீஸ்வரர் தேவஸ்தானத்திற்குச் சம்பளம் பெறாச் சிறப்பு அதிகாரி மற்றும் நிர்வாக அதிகாரியாக அரசால் இதன்மூலம் நியமனம் செய்யப்படுகிறார்.

4. திரு. ரா. திருவரசன் அவர்கள், மேற்கூறிய தேவஸ்தானத்தின் நிர்வாகத்தை அதன் அசையும், அசையாச் சொத்துக்கள் மற்றும் இதர ஆவணங்களுடன் பதவி விலகிய மேற்கூறிய சிறப்பு அதிகாரி மற்றும் நிர்வாக அதிகாரி திரு. P. தங்கமணி அவர்களிடமிருந்து பொறுப்பேற்றுக் கொண்டு, அரசுத் துறையில் தான் வகிக்கும் பதவிக்குக் கூடுதலாகவும், 1972-ஆம் ஆண்டு புதுச்சேரி இந்து சமய நிறுவனங்கள் சட்டம் மற்றும் அதன் கீழ் உருவாக்கப்பட்டுள்ள விதிகளுக்கு இணங்கவும், தேவஸ்தானத்தின் நிர்வாகத்தைக் கவனித்துவரவேண்டும்.

(துணைநிலை ஆளுநரின் ஆணைப்படி)

**பா. தில்லைவேல்,**
அரசு சார்புச் செயலர் (கோயில்கள்).

புதுச்சேரி அரசு

## இந்து சமய நிறுவனங்கள் மற்றும் வக்ஃபு துறை

*(அரசு ஆணை பலவகை எண் 45/இசநி /கோ.3/2017,*
*புதுச்சேரி, நாள் 2017 ௵ பிப்ரவரி ௴ 7௳)*

### ஆணை

புதுச்சேரி மாநிலம், உழவர்கரை கொம்யூன், மேரி உழவர்கரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் மற்றும் முத்துமாரியம்மன், தேவஸ்தானம் அரசு ஆணை பலவகை எண் 13/இசநி/கோ.3/2010, நாள் 5-4-2010-ன் மூலம் அமைக்கப்பட்ட அறங்காவலர் வாரியத்தால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இவ்வறங்காவலர் வாரியத்தின் பதவிக்காலம் முடிவடைந்துவிட்டது.

2. இந்நிலையில், மேற்கூறிய தேவஸ்தானத்திற்கு புதிய அறங்காவலர் வாரியம் அமைக்கும் வரையில் ஒரு சிறப்பு அதிகாரியை நியமனம் செய்து நிர்வகிப்பது இன்றியமையாதது என்று அரசால் கருதப்படுகிறது.

3. எனவே, 1972-ஆம் ஆண்டு புதுச்சேரி இந்து சமய நிறுவனங்கள் சட்டம் 4-ஆம் பிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்தி, புதுச்சேரி, செய்தி மற்றும் விளம்பரத்துறை அலுவலகத்தில் இளநிலை கணக்காளராக பணிபுரியும் திரு. ர. கார்த்திகேயன் த/பெ. ரங்கநாதன் அவர்களை, உழவர்கரை கொம்யூன், உழவர்கரை, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் மற்றும் முத்துமாரியம்மன், தேவஸ்தானத்திற்கு சம்பளம் பெறாச் சிறப்பு அதிகாரியாக அரசால் இதன்மூலம் நியமனம் செய்யப்படுகிறது.

4. திரு. ர. கார்த்திகேயன் அவர்கள், மேற்கூறிய தேவஸ்தானத்தின் நிர்வாகத்தை, அதன் அசையும், அசையாச் சொத்துக்கள் மற்றும் இதர ஆவணங்களுடன் பதவி விலகும் அறங்காவலர் வாரியத்திடமிருந்து பொறுப்பேற்றுக்கொண்டு, அரசுத் துறையில் தான் வகிக்கும் பதவிக்குக் கூடுதலாகவும், 1972-ஆம் ஆண்டு புதுச்சேரி இந்து சமய நிறுவனங்கள் சட்டம் மற்றும் அதன்கீழ் உருவாக்கப்பட்டுள்ள விதிகளுக்கு இணங்கவும், தேவஸ்தானத்தின் நிர்வாகத்தைக் கவனித்துவரவேண்டும்.

5. சிறப்பு அதிகாரி நியமனம் ஓர் இடையேற்பாடு என்பதால், தேவஸ்தான நிர்வாகம் தொடர்பான அன்றாடப் பணிகளை மட்டுமே சிறப்பு அதிகாரி கவனித்துவரவேண்டும். அறங்காவலர் வாரியத்தால் எடுக்கப்படக்கூடிய எவ்வித கொள்கை முடிவுகளையும் இந்து சமய நிறுவனங்கள் ஆணையர் அனுமதியின்றி சிறப்பு அதிகாரி மேற்கொள்ளக்கூடாது.

(துணைநிலை ஆளுநரின் ஆணைப்படி)

**பா. தில்லைவேல்,**
அரசு சார்புச் செயலர் (கோயில்கள்).

GOVERNMENT OF PUDUCHERRY

**OFFICE OF THE CHIEF EDUCATIONAL OFFICER**

*No. 650/CEO/Exam Cell/2017.*

*Puducherry, the 10th February 2017.*

NOTIFICATION

It is hereby notified that the following candidates have lost their original S.S.L.C. Mark Certificates and beyond the scope of recovery, the necessary steps have been taken to issue duplicate certificates. If, any one finds the original Mark Certificate(s), it/they may be sent to the Director, State Board of School Examinations (Sec.), College Road, Chennai – 600 006 for cancellation, as it is/they are no longer valid.

| Sl. No. | Name of the applicant | Register No., session and year | Sl. No. of the mark certificate | School in which studied last |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | Thiru/Tmt./Selvi | | | |
| 1 | M. Vanitha | 137293, March, 1976 | — | Kasthuribai Gandhi Government Girls' Higher Secondary School, Bahour, Puducherry. |
| 2 | S. Sarassou | 261876, March, 1990 | — | Kannagi Government Girls' Higher Secondary School, Villianur, Puducherry. |
| 3 | A. Nivetha | 571388, March, 2009 | — | Immaculate Heart of Mary Girls' Higher Secondary School, Puducherry. |

**V. Ranganathan,**
Chief Educational Officer.

GOVERNMENT OF PUDUCHERRY

**SOCIAL WELFARE SECRETARIAT**

*(G.O. Ms. No. 5/SWS/2017,*
*Puducherry, dated 15th February 2017)*

NOTIFICATION

In pursuance of rule 91 of the Juvenile Justice (Care and Protection of Children) Rules 2011 and in supersession of the G.O. Ms. No. 18/2011-Wel.(SW-V), dated 4-4-2011 of the Chief Secretariat (Welfare), Puducherry, the Lieutenant-Governor, Puducherry is pleased to reconstitute a Selection Committee for the purpose of the said rules with the following composition, namely:-

1. Mr. Justice S. Jagadeesan, Retired Judge, High Court, Madras, No. 23, III Main Road, Gandhi Nagar, Adayar, Chennai. .. Chairperson
2. Dr. S. Umamaheswari, M.B.B.S., DCH., Puduvai Life Line Speciality Clinic, No. 2A, New Street, Pudupet, Lawspet, Puducherry-605 008. .. Member
3. P. Asha, Associate Professor, (Specialization in Child Development), Department of Home Science, Bharathidasan Government College for Women, Puducherry. .. Member
4. A. Kamalasegaran, Member in Aasi Seva Trust, Kurumbapet, Plot No. 4, Door No. 8, Third Cross, Moogambigai Nagar, Nainarmandapam, Mudaliarpet, Puducherry-605 004. .. Member
5. Tmt. Claudine Gunasekar, Rotary Central Club, Manakula Vinayagar Nagar, Puducherry. .. Member

6. Dr. S. Devi Priyaa, B.D.S., Member- Puducherry Women's Commission, Puducherry. . . Member

7. Director of Social Welfare . . Member-Secretary.

2. The tenure of Selection Committee is 5 years from the date of this order. The non-official members of the Selection Committee shall be eligible for travelling allowance applicable to the Group 'A' Officers of the Government of Puducherry.

(By order of the Lieutenant-Governor)

**R. Mihir Vardhan, I.A.S.,**
Secretary to Government (Welfare).

---

GOVERNMENT OF PUDUCHERRY

**HEALTH SECRETARIAT**

*(G. O. Ms. No. 11, Puducherry, dated 16th February 2017)*

NOTIFICATION

The resignation tendered by Dr. Dharavath Thukaram, General Duty Medical Officer, Government General Hospital, Karaikal as a technical formality in order to take up appointment as Medical Officer in the GDMO sub-cadre of the Central Health Service under Department of Posts with proper permission is accepted with effect from the afternoon of 17-02-2017.

(By order of the Lieutenant-Governor)

**V. Jeeva,**
Under Secretary to Government (Health).

---

GOVERNMENT OF PUDUCHERRY

**HEALTH SECRETARIAT**

*(G.O. Ms. No. 12, Puducherry, dated 16th February 2017)*

NOTIFICATION

The tentative seniority list of Medical Officer (Ayurveda), Medical Officer (Siddha) and Medical Officer (Homeopathy) appointed during the period from 1-1-1991 to 30-9-2016 in the Department of Indian Systems of Medicine and Homeopathy, Puducherry was circulated to all concerned *vide* this Secretariat's O.M. No. 2108/H6/Health/2016, dated 2-11-2016.

After careful consideration of the objection so received, the seniority list of Medical Officer (Ayurveda), Medical Officer (Siddha) and Medical Officer (Homeopathy) is finalized and fixed as indicated below:

| Sl. No. | Seniority No. | Name of the Medical Officer and present designation | Date of appoinment as Medical Officer (Redesignated) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | Dr. E.T. Selvaraj, CMO (NFSG) (Siddha). | 27-3-1991 |
| 2 | 2 | Dr. V.K. Thamban, CMO (NFSG) (Ayurveda), (Retired). | 15-4-1991 |
| 3 | 3 | Dr. N.Balaji, CMO (NFSG) (Homeopathy). | 15-8-1991 |
| 4 | 4 | Dr. M.N. Muralidharan (Retired) | 18-8-1992 |
| 5 | 5 | Dr. K. Srikumar (Resigned) | 31-8-1996 |
| 6 | 6 | Dr. S. Indhira, CMO (NFSG) (Siddha). | 28-8-1996 |
| 7 | 7 | Dr. R. Sridharan, CMO (NFSG) (Siddha). | 9-8-1996 |
| 8 | 8 | Dr. Purushotham Mada, CMO (NFSG) (Ayurveda). | 27-12-2000 |
| 9 | 9 | Dr. Padmavathamma Sangaraju, CMO (NFSG )(Ayurveda). | 1-8-2001 |
| 10 | 10 | Dr. N.C. Prasannalakshmi, CMO (Ayurveda). | 2-5-2005 |
| 11 | 11 | Dr. Bhimsen Behera (Resigned) | 13-6-2005 |
| 12 | 12 | Dr. Stanley Stevenson Madiki, CMO (Homeopathy). | 9-5-2005 |

(By order of the Lieutenant-Governor)

**V. Jeeva,**
Under Secretary to Government (Health).

---

GOVERNMENT OF PUDUCHERRY

**DEPARTMENT OF PERSONNEL AND ADMINISTRATIVE REFORMS (PERSONNEL WING)**

*[G. O. Ms. No. 9/DP&AR/SS.II(1), Puducherry, dated 20th February 2017]*

NOTIFICATION

The notices of voluntary retirement given under rule 48 of CCS (Pension) Rules, 1972 by the following Superintendents are accepted.

| Sl. No. | Name of the Superintendent and Department/Office |
|---|---|
| (1) | (2) |
| 1 | Thiru N. Ramachandiran, Superintendent, Directorate of School Education, Puducherry. |
| 2 | Tmt. G. Varalakshmi, Superintendent, Jawaharlal Nehru Government Higher Secondary School, Nedungadu, Puducherry. |

2. Accordingly, the above Superintendents shall retire from service with effect from the forenoon of 1-3-2017.

(By order)

**M. KANNAN,**
Under Secretary to Government (DP&AR).

---

GOVERNMENT OF PUDUCHERRY

**FINANCE DEPARTMENT**
**(CHIEF SECRETARIAT)**

(*G. O. Ms. No. 58/F2/A2/2017, Puducherry, dated 21st February 2017*)

NOTIFICATION

On attaining the age of superannuation, Tmt. C. Maidily @ Sidevi, Financial Controller, Directorate of Stationery and Printing, Puducherry, who is working on deputation basis in the Project Implementation Agency, Puducherry is admitted into retirement on the afternoon of 28-2-2017.

(By order)

**K. GOVINDARAJAN,**
Under Secretary to Government (Finance).

---

GOVERNMENT OF PUDUCHERRY

**FINANCE DEPARTMENT**
**(CHIEF SECRETARIAT)**

(*G.O. Ms. No. 59/F2/A2/2017, Puducherry, dated 21st February 2017*)

NOTIFICATION

On attaining the age of superannuation, Thiru M. Balasubramanian, Junior Accounts Officer, Buildings and Roads (South) Division, Public Works Department, Puducherry is admitted into retirement on the afternoon of 28-2-2017.

(By order)

**K. GOVINDARAJAN,**
Under Secretary to Government (Finance).

---

GOVERNMENT OF PUDUCHERRY

**FINANCE DEPARTMENT**
**(CHIEF SECRETARIAT)**

(*G. O. Ms. No. 60/F2/A2/2017, Puducherry, dated 21st February 2017*)

NOTIFICATION

On attaining the age of superannuation, Thiru K. Chitti Babu, Junior Accounts Officer, Office of the Executive Engineer, Public Works Department, Yanam is admitted into retirement on the afternoon of 28-2-2017.

(By order)

**K. GOVINDARAJAN,**
Under Secretary to Government (Finance).

---

**உழவர்கரை நகராட்சி**

*எண் 25-60/இ.பொ(4)/உ.ந/2015-2016.*

**இறுதி அறிவிப்பு**

உழவர்கரை நகராட்சியில் ரெட்டியார்பாளையம் வருவாய் கிராமத்தில் புதியதாக உருவாக்கப்பட்டுள்ள புதிய காலனியில் சாலைப் பகுதிகளின் விவரங்களடங்கிய பட்டியல் அடியிற்கண்ட அட்டவணையில் நகராட்சி பொது வீதிகளாக அறிவிக்க உத்தேசித்து அதற்கான அறிவிப்பு 15-12-2016-ஆம் தேதியிட்ட தினகரன் மற்றும் 15-12-2016-ஆம் தேதியிட்ட 'தி நியு இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேடுகளில் மற்றும் புதுச்சேரி மாநில அரசிதழ் எண் 'WPP. No. 88/52, 27-12-2016' தேதியிட்ட புதுச்சேரி மாநில அரசிதழில் பிரகடனப்படுத்தப்பட்டது.

ஆட்சேபணை ஏதும் பெறப்படாத காரணத்தினால், அந்த அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள கீழ்கண்ட வீதிகள் பொது வீதிகளாக இந்நகராட்சியால் கருதப்படுகிறது.

எனவே, உழவர்கரை நகராட்சி சட்டம் 1973-ன் பிரிவு 256 மற்றும் 109A உபயோகத்தின்படி அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி உழவர்கரை நகராட்சி கீழ்கண்ட அட்டவணையில் கண்டுள்ள வீதிப் பகுதிகளை மேற்குறித்த சட்டத்தின்கீழ் அனைத்து பொது நோக்கங்களுக்குமான பொது வீதிகளாக அவ்வறிவிப்பு வெளியான தினத்திலிருந்து பிரகடனப்படுத்தப்படுகிறது.

| வரிசை எண் | வருவாய் கிராமம்/ உட்கிராமம் | உரிமையாளர் பெயர் (ஆவணப்படி) | மறு அளவை எண் | பட்டா எண் | அளவு | | | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நீளம் | அகலம் | பரப்பளவு | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| ***உழவர்கரை தொகுதி:*** | | | | | மீ. | மீ. | ச.மீ. | |
| ***உழவர்கரை வருவாய் கிராமம்:*** | | | | | | | | |
| 1. | அன்னைதெரெசா நகர் முதல் தெரு. | திருவாளர்கள் : லெசாழ் தங்க பிரகாசம் | 152/2A | 359 | 79.30 | 6.10 | 484.00 | வடக்கு-தெற்கு. |
| | | லெசாழ் தங்க பிரகாசம் | 152/2A | 359 | 36.60 | 6.10 | 223.30 | கிழக்கு-மேற்கு. |

*ஜவகர் நகர், 2017 ஆம் பிப்ரவரி மீ 13 உ.*

**M.S. ராமேஷ்,**
ஆணையர்.

புதுச்சேரி அரசு

## காவல் துறை

### ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

புதுச்சேரி காவல் துறை தலைமை அலுவலகத்திற்குச் சொந்தமான பழைய தமிழ் மற்றும் ஆங்கில தினசரிகள் மற்றும் மாத, வார இதழ்களை விற்கும் பொருட்டு, ஆண்டு அடிப்படையில் (இந்த ஆண்டிற்கு 1-1-2017 முதல் 31-12-2017 முடிய) ஒரு கிலோவிற்கு சம்மதித்த விலையைக் குறிப்பிட்டு, மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

2. பின்வருமாறு ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியே ஒரு கிலோவிற்கான விலை விகிதம் எவ்வளவு எனக்குறிப்பிட வேண்டும்.

| | | ஒரு கிலோவிற்கான விலை |
|---|---|---|
| (1) | பழைய தமிழ் செய்தித்தாள்கள் | . . ₹ |
| (2) | பழைய ஆங்கில செய்தித்தாள்கள் | . . ₹ |
| (3) | பழைய தமிழ் மாத/வார இதழ்கள் | . . ₹ |
| (4) | பழைய ஆங்கில மாத/வார இதழ்கள் | . . ₹ |

3. அரக்கினால் மூடி முத்திரையிடப்பட்ட உறையின்மேல் "பழைய செய்தித்தாள்கள் மற்றும் மாத/வார இதழ்கள் வாங்குவதற்கான ஒப்பந்தப்புள்ளி ஆண்டு அடிப்படையில் [இந்த ஆண்டிற்கு 1-1-2017 முதல் 13-12-2017 முடிய]" என குறிப்பிட்டு காவல் துறைத் தலைமை அலுவலம், புதுச்சேரி என்ற முகவரிக்கு 13-3-2017 அன்று 14.00 மணிக்கு முன்பாக வந்து சேருமாறு அனுப்பி வைக்கப்படவேண்டும் அல்லது ஒப்பந்தப்புள்ளிகளை பெறுவதற்காக காவல் கண்காணிப்பாளர் (தலைமையகம்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடவேண்டும். அவ்வாறு அனுப்பப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 13-3-2017 அன்று 17.00 மணிக்கு வருகைதந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் பிரித்துப்பார்க்கப்படும்.

4. ஒப்பந்தப்புள்ளி அனுப்புபவர்கள் முன்வைப்புத் தொகையாக (EMD) ₹ 1,000 (ரூபாய் ஓர் ஆயிரம் மட்டும்) காவல் கண்காணிப்பாளர் (தலைமையகம்) என்ற பெயருக்கு குறுக்கு கோடிட்ட வரைவு காசோலையை வங்கியில் பெற்று ஒப்பந்தப் புள்ளியுடன் (Tender) இணைத்து மூடிமுத்திரையிடப்பட்ட உறையில் வைத்து காவல் கண்காணிப்பாளர் (தலைமையகம்), காவல் துறை, புதுச்சேரி என்று முகவரியிட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் இடவேண்டும். ஒப்பந்தப்புள்ளி முடிந்தவுடன் வெற்றிபெறாதவர்கள் செலுத்திய முன்வைப்புத் தொகை திருப்பித்தரப்படும். வென்ற ஒப்பந்ததாரர்களுடைய முன்வைப்புத் தொகை அரசாங்க கணக்கில் முறைப்படி அவர்கள் பெயரில் காப்புத்தொகையாக வைக்கப்படும்.

5. வெற்றி பெற்ற ஒப்பந்ததாரர்கள் முழுத்தொகையினையும் உடனடியாக செலுத்தி பொருட்களை அவரது சொந்த செலவில் இவ்வலுவலக உத்தரவு கிடைத்த நான்கு நாட்களுக்குள் அலுவலக கட்டடத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டும். அப்படிச் செய்யத் தவறினால், அவர் செலுத்திய முன்வைப்புத்தொகை அரசாங்கத்தைச் சேரும். மேலும், அவர் மேற்கொண்டு பொருட்களை எடுத்துச்செல்லும் உரிமையை அந்த வருடத்தில் இழந்துவிடுவார். நான்காவது நாள் அரசு விடுமுறையாக நேர்ந்தால் வென்ற ஒப்பந்ததாரரின் விண்ணப்பப்படி எழுத்துமூலம் மறு வேலைநாள் வரை அந்தத் நாள் நீட்டிக்கப்படும். விற்பனை செய்யப்பட்ட பொருட்களின் அளவு, தரம் மற்றும் மதிப்பு சம்பந்தமாக எந்தவித உரிமைக்கோரலும் அனுமதிக்கப்பட மாட்டாது.

6. யாதொரு காரணமும் கூறாமல் அனைத்து அல்லது ஏதேனும் ஓர் ஒப்பந்தப்புள்ளியை மறுக்க கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு முழு உரிமை உண்டு. ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புக்கான விதிகளை மீறி ஒப்பந்ததாரர்கள் செயல்பட்டால் முன்வைப்புத்தொகையாக செலுத்தப்பட்ட அல்லது காப்புத்தெகையாக வைக்கப்பட்டுள்ள தொகைகள் முடக்கி வைக்கப்படும்.